23.07.2025.

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண்.35/2025</u>

அ.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கமாலுதீன் | | |
| த/பெ | அப்துல் மஜீத் | | |
| கிராமம் | ஜானகிபுரம் | தொழில் | பேருந்து ஓட்டுனர் |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 42/2025 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 23.07.2025 |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

## <u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் புதுவை மாநிலம் நெட்டப்பாக்கத்தில் உள்ள எம்.ஆர்.எப். கம்பெனியில் பேருந்து ஓட்டுனராக பணி செய்து வருகிறேன். எனக்கு ஆஜர் எதிரிகளை தெரியும். வீரப்பன் என்பவரின் இடத்தின் அருகே என் சித்தி அபிபுன்னிசா இடம் உள்ளது. அதை எனது பக்கத்து வீட்டுக்காரரும் உரிமை கோருகிறார். வீரப்பனும் உரிமை கோருகிறார். அபிபுன்னிசா என்பவரின் வீட்டின் கழிவு நீர் அவர் வீட்டின் பக்கத்தில் உள்ள காலிமனையில் ஓடி அருகில் உள்ள வாய்க்காலில் சென்று சேர்கிறது. அதை இரண்டு பேர் உரிமை கோரி வந்ததால், அது சம்பந்தமாக பஞ்சாயத்து பேசி எனது சித்தி நீங்கள் இருவரில் யார் வேண்டுமானாலும் அதன் உரிமையாளராக இருங்கள், நான் உரிமையாளரிடம்

பணத்தை கொடுத்து அந்த இடத்திற்கு அடியில் எனது கழிவுநீர் பைப்பை புதைத்துக் கொள்கிறேன் என்று தெரிவித்தார். இது சம்பந்தமாக பலமுறை பிரச்சனை ஏற்பட்டுள்ளது. கடந்த 04-08-2024 அன்று இரவு சுமார் 7.30 மணி அளவில் நாங்கள் உறவினர்கள் அனைவரும் ஒரு நிகழ்ச்சிக்கு சென்று விட்டு வீடு திரும்பினோம். பேருந்தை விட்டு இறங்கி பேருந்துக்கு கணக்கு தீர்ப்பதற்காக ஜானகிபுரம் அங்காளம்மன் கோயில் அருகில் நின்றிருந்தபோது, வீரப்பன் என்பவர் சரவணன் என்பவருக்கு மது வாங்கி கொடுத்து, எங்களை பைப்பால் அடிக்க வந்தார். அவர் அடிக்க வந்தபோது நான் கையால் தடுத்தேன். உடனே எனது பக்கத்தில் இருந்த எனது தம்பி சதாம் என்பவரையும் அடித்தார்கள். உடனே நாங்கள் சுதாரித்துக் கொண்டு தடுக்க முயற்சி செய்தபோது அந்த இடத்தில் ஒரு பிரச்சினை நடந்தது. எதிரிகள் தேவிடியா பசங்களா ஊருக்குள் பாய் யாரும் குடும்பம் இருக்கக் கூடாது என்று ஆபாசமாக கத்தியை காட்டி மிரட்டி திட்டினார்கள். பாய் யாரும் ஊருக்குள் வரக்கூடாது என்று திட்டினார். அப்போது உடனடியாக நானும், எனது தம்பியும் அங்கிருந்து மீண்டு முதலில் விழுப்புரம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு எங்களுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. அதன் பிறகு மறுநாள் காலையில் நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். அந்தப் புகார் என்னிடம் காண்பிக்கப்படுவதுதான். அந்த புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். என்னை தாக்க பயன்படுத்திய பைப் மற்றும் தடியை பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். சாட்சி அந்த இரும்பு பைப்பை சரியாக அடையாளம் காண்பித்தார். அது சா.பொ.1 ஆகும். மேலும் கத்தியை சாட்சி அடையாளம் காண்பித்தார். அது சா.பொ.2 ஆகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் தற்போது நீதிமன்றத்தில் சொன்னதை தான் காவல்துறை விசாரணையிலும் சொன்னேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து விழுப்புரம் அரசு மருத்துவமனைக்கு சுமார் 10 நிமிடத்தில் வந்துவிடலாம் என்றால் சுமார் 10 முதல் 15

நிமிடம் ஆகும். அதேபோல் அந்த இடத்திலிருந்து காவல் நிலையத்திற்கு சுமார் 15 நிமிடத்திற்குள் சென்று விடலாம் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்ததாக சொல்லப்படும் ஆவணத்தில் உள்ள புகாரை நான் எழுதவில்லை என்றால் சரிதான். எனக்கு எழுத வராது.

**<u>2 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் இரண்டாம் எதிரிக்கும், எனது சித்திக்கும் இடையே கழிவுநீர் தொடர்பாக பிரச்சனை நடந்தது என்பது குறித்த விஷயங்களை எனது புகாரிலோ, காவல்துறை விசாரணையிலோ, சொல்லியுள்ளேனா ? என்றால் சொல்லியுள்ளேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் சுமார் 7 முதல் 8 மணி இருக்கும். அப்போது இருட்டாக இருந்தது. தெருவிளக்கு வெளிச்சம் இருந்தது. சண்டை இரவு 8 மணிக்குள் முடிந்துவிட்டது. நான் விழுப்புரம் அரசு மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால், சுமார் 10 மணிக்குள் சென்றிருப்பேன். சரியாக ஞாபகம் இல்லை. என்னையும், சதாமையும் எங்களது அண்ணன் மகன் ரசாக் என்பவர் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் அந்நிய சாட்சிகள் யாரும் இல்லை என்று சொன்னால் சரிதான். நான் மறுநாள் 05-08-2024 காலை 9 மணிக்கு தாலுக்கா காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். அதன்பிறகு போலீசார் என்னை எப்போது விசாரணை செய்தார்கள் என்றால், நான் புகார் கொடுத்தவுடனேயே காவல் நிலையத்தில் வைத்து என்னை விசாரணை செய்து வாக்குமூலம் வாங்கினார்கள். அப்படி விசாரிக்கும் போது நான் பைப்பை பற்றியும், கத்தியை பற்றியும் சொன்னேனா? என்றால், பைப் மற்றும் கத்தி பற்றி சொன்னேன் ஆனால் அதன் அளவுகளை குறித்து சொல்லவில்லை. மரப்பிடி போட்ட கத்தி என்று சொல்லவில்லை. அந்த கத்தியை எதிரி இடுப்பில் இருந்து எடுத்தார். கழிவுநீர் செல்லக்கூடிய இடத்தை ராஜமாணிக்கம் என்பவர் இடம் வீரப்பனின் தாத்தாவிடம் இருந்து வாங்கினார் என்றால், சரியல்ல. வீரப்பன் அந்த இடத்தில் வீடு கட்டி வசித்து வருகிறார் என்றால், இல்லை சுவர் எழுப்பி குடிசை போட்டு வசித்து வருகிறார். கடந்த 5 வருடமாக அங்கு தான் அவர் வசித்து வருகிறார்

என்றால் சுமார் 3 அல்லது 3 1/2 வருடமாக அங்கு வசித்து வருகிறார். அந்த இடத்து பிரச்சினை காரணமாக தான் நாங்கள் நடக்காத சம்பவத்தை நடந்தது போன்று புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**